Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 253

சனிக்கிழமை
06 ஒகஸ்ட் 2022

ஆடி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## வடமாகாண பாடசாலைகளை 5 நாள்களும் செயற்படுத்தவும்

வடக்கு மாகாண பிரதம செயலாளர் அறிவுறுத்து

விரிவு - பக். 06

# எதிர்க்கட்சியாக அமர்ந்தாலும் அமைச்சைப் பொறுப்பேற்குக!

### பிரிட்டனை மேற்கோள்காட்டி சஜித் தரப்பிடம் ரணில் கோரிக்கை



கொழும்பு, ஒகஸ்ட் 6

எதிர்க்கட்சியாக இருந்தாலும் அமைச்சைப் பொறுப்பேற்க ஐக்கிய மக்கள் சக்தி முன்வர வேண்டும். 1941ஆம் ஆண்டு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியானது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்துக்கொண்டு அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொண்டது. முழு நாடாளுமன்றமும் அரசாக ஆக்கப்பட்டது. அதே மரபை நாமும் செயற்படுத்தலாம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் சஜித் தரப்பிடம் கோரிக்கை விடுத்தார்.

11

## முச்சந்தி முரளி



"இப்பிடி வந்து சேருங்கோ எண்டு சொல்லி சஜித்தின்ர ஆட்டத்தையும் குளோஸ் பண்ணப் பாக்கிறார் போல..."

## 'கோத்தா கோ கம' ஒருபகுதி அகற்றம்!

கொழும்பு, ஒக. 6

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட கோத்தாகோகமபோராட்டக்களத்தின் ஒரு பகுதிக் கூடாரங்கள் நேற்று நண்பகல் போராட்டக்காரர்

11

## அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குங்கள்

### ரணிலிடம் சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஒக. 7

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குவதுடன், 19ஆவதுதிருத்தத்தை மேலும் சிறந்த சாதக அம்சங்களுடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

## பொருளாதாரப் போரை இணைந்து வெல்வோம்

### ஆர்ப்பாட்டக்காரர்களை அழைத்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக. 6

ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் இளைஞர்களுடன் இணைந்து வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட நான் தயார். நாம் இப்போது பொருளாதாரப் போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும். அந்தப் பொருளாதாரப் போராட்டத்தின் வெற்றிக்குப் போராட்டக் களத்தில் உள்ள அனைத்து இளைஞர், யுவதிகளையும் சகல வழிகளிலும் பங்கேற்கச் செய்ய நான் எதிர்பார்த்துள்ளேன் இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களைப்

10

## இன்றும் நாளையும் மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஒக. 6

இன்றும், நாளையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த சில வாரங்களாக சுமார் மூன்று மணிநேர மின்வெட்டு நாடளாவிய

11

## காலிமுகத்திடல் கூடாரங்கள் தற்போதைக்கு அகற்றப்படா!

### சட்டமா அதிபர் உறுதி

கொழும்பு, ஒக. 6

உரிய சட்டவிதிகளைப் பின்பற்றாமல் காலிமுகத்திடல் கோத்தா கோ கம போராட்டப் பகுதியில் அமைக்கப்பட்ட கூடாரமெதுவும் எதிர்வரும் 10ஆம் திகதி

11

## ஐஸ் போதை: இருவர் கைது

முல்லைத்தீவு, ஒக. 6

முல்லைத்தீவில் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இளைஞர்களில் ஒருவர் 22 வயதுடையவர்.

11

### புலம்பெயர் தொழிலாளர்களின்

## வங்கிப் பரிவர்த்தனைக்கு வரி விலக்குடன் சலுகை!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 6

வங்கிகள் மூலம் பணத்தை அனுப்பும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான வரி விலக்கை

11

## தன்னிச்சையான கைதுகள் உடன் நிறுத்தப்படவேண்டும்

### காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியிடம் நேரில் வலியுறுத்து

கொழும்பு, ஒக. 6

அமைதியான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைச் சட்டவிரோதமாகவோ அல்லது தன்னிச்சையாகவோ கைதுசெய்வது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

ஜனாதிபதிக்கும், காலிமுகத்

10

## நீச்சல் தடாகத்தில் சடலமொன்று மீட்பு

முல்லைத்தீவு, ஒக. 6

முல்லைத்தீவு நகரில் உள்ள தனியார் விடுதியொன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்து

10

## அரச அலுவலர்கள் ஓய்வூதியர்களுக்கு இன்று எரிபொருள்!

யாழ்ப்பாணம், ஒக. 6

யாழ்ப்பாணத்தில் அரச அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு இன்று எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

10

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிராந்தியத்தின் அமைதியை குலைக்கக்கூடாது இலங்கை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக.6**

**இந்து சமுத்திரப் பிராந்தியம் எப்பொழுதும் அமைதிப்பூங்காவாகத் திகழவேண்டும் என்பதில் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே அந்த அமைதி முயற்சியைக் குலைக்கும் விதத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அமைந்துவிடக்கூடாது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த ஆய்வுக் கப்பலானது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கண்காணிப்பதுடன், செய்மதிகள் அனுப்புவது போன்றவற்றைக் கண்காணிக்கும் திறன் கொண்டதுமாகும். இந்தக் கப்பலைச் சுற்றி 750 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு சகலவற்றையும் கண்காணிக்கும் தொழில்நுட்பத் திறன்களையும் கொண்டது.

இந்தியாவின் பாதுகாப்பு எல்லைப் பரப்புக்குள் இலங்கையும் உள்ளடங்குகின்றது. இந்தியாவின் தென் மாநிலங்களில் அணுசக்தி நிறுவனங்களும், செய்மதி ஏவுதளங்களும் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களும் உள்ளன. இத்தகைய ஒரு சூழ்நிலையில், சீன உளவுக் கப்பலின் வருகை என்பது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்பதற்கு அப்பால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இந்துசமுத்திரப் பிராந்தியமானது அமைதிப்பிரதேசம் என்ற நிலையிலிருந்து அமெரிக்க, சீன வல்லரசுகளின் வல்லாதிக்கப் போட்டியின் களமாக மாறுகின்றதா என்ற அச்சம் எழுகின்றது. 2016 ஆம் ஆண்டு சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக்கு வந்தபொழுது இந்தியா தனது கவலையைத் தெரிவித்திருந்தது. அன்று இலங்கை அரசாங்கம் இந்தியாவின் கவலைக்கு உரிய விதத்தில் பதிலளிக்கவில்லை. இப்போதும் சீனா தனது உளவுக் கப்பலை இலங்கைக்குள் நங்கூரமிடத் திட்டமிட்டுள்ளது. இதற்கும் இந்தியா தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கம் அந்தக் கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காகவே வருகின்றது என்று கூறுகிறது. இலங்கையின் இத்தகைய அணுகுமுறைகளைப் பார்க்கின்றபோது இந்து சமுத்திரத்தின் அமைதியின்மைக்கு இலங்கையும் துணைபோகின்றதோ என்ற கேள்வி பலமாக எழுகின்றது.

இலங்கையில் ஏற்படும் இனமுரண்பாடுகள் மற்றும் இலங்கை ஏனைய வல்லாதிக்க சக்திகளின் பிடிக்கு உட்படுவது என்பது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதில் இந்தியா எப்பொழுதும் கரிசனை கொண்டு செயற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே, இலங்கையில் இனமுரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதிலும் இலங்கை ஏனைய வல்லாதிக்க சக்திகளின் ஆளுமைக்குள் செல்லக்கூடாது என்பதிலும் இந்தியா கரிசனையுடன் செயற்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் அண்மைக்கால இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளானது இந்தியாவின் இந்த முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என அஞ்சுகின்றோம். இலங்கையின் தவறான வெளியுறவுக் கொள்கைகள் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதல்ல என்பதையும் நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் காத்திரமான மாற்றங்கள் தேவை என்பதையும் இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதிப்பிராந்தியமாகத் திகழவேண்டும் என்பதற்கு முதன்மை ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதிலும் இலங்கை கவனத்துடன் செயற்படவேண்டுமென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோருகின்றது - என்றுள்ளது. (எ-இ)

# ஐ.எம்.எப். உடன்படிக்கையை எம்.பிக்கள் ஆதரிக்கவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

கொழும்பு, ஓக.6



விரைவான பொருளாதார மீட்சியை உறுதி செய்வதற்கும் கடன் பேண்தகு தன்மையை உறுதி செய்வதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைக்கு ஆதரவை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க, நாங்கள் விரும்புகின்றோமோ இல்லையோ நாங்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சு மேற்கொள்ளவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகளை செய்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையைத் தளமாக கொண்ட அட்வொகொட்டா நிறுவகம் ஏற்பாடு செய்துள்ள பொருளாதார மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை செய்துகொள்வதை நாங்கள் ஏற்கவில்லை என நாடாளுமன்றத்தின் எந்த உறுப்பினரோ அல்லது கட்சியோ தெரிவித்தால் நாங்கள் உங்கள் தீர்வு என்ன? மாற்றுதிட்டம் என்ன? என அவர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாங்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சு மேற்கொள்ளும்போது எதிர்கொள்கின்ற முக்கியமான விவகாரம் என்னவென்றால் அரசாங்கம் மாறும்போது கொள்கையும் மாறுவதே. நாடு சர்வதேச நாணயநிதியத்தை ஏற்றுக்கொள்ள தயாரில்லாவிட்டால் நாடாளுமன்றம் அதற்கான விளைவுகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். நாங்கள் ஒருபகுதியை, அரைவாசியை ஏற்றுக்கொள்கின்றோம் அரைவாசியை நிராகரிக் கின்றோம் எனத் தெரிவிக்கமுடியாது. நாங்கள் முழுமையாக அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விடயம் மாத்திரமல்ல. நாடாளுமன்றத்துக்குள் தீர்மானங்களை எடுப்பவர்கள் மீது நாடாளுமன்றத்துக்கு வெளியே உள்ளவர்கள் செல்வாக்கு செலுத்த வேண்டும். இது கசப்பானதாகயிருக்கலாம், ஆனால் எந்த மருந்தும் கசப்பானதுதான் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் சாவு

நாட்டில் நேற்றுமுன்தினம் இரவு இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

லுணுகம்வெஹர பிரதேசத்தில் 34 வயதான ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். லுணுகம்வெஹெர பிரதேச செயலக உத்தியோகத்தரான யு.எஸ்.டி. திலின என்பவரே கொல்லப்பட்டுள்ளார். வீட்டில் தனது பிள்ளைகளுடன் இரவு உணவு அருந்திக்கொண்டிருந்தபோது இவர் கொல்லப்பட்டுள்ளார். வீட்டில் பாதுகாப்புக் கமரா பொருத்தப்பட்டிருந்தபோதும், மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததால் அவை இயங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அதேவேளை, அஹ்கமவில் உள்ள விடுதி ஒன்றில் 44 வயதுடைய ஆண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (எ-இ)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் நேற்று மாற்றம்!

## புறக்கோட்டை வர்த்தகர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.6

புறக்கோட்டை வர்த்தக சந்தையில் நேற்று பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, வெங்காயம், உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் மொத்த விலை குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது எனப் புறக்கோட்டை வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பருப்பு 400 ரூபாவாகவும் 330 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் சீனி 270 ரூபாவாகவும் 190 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் 135 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன.

மேலும் 550 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளைப்பூண்டு, 400 ரூபாவாகவும், 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு 150 ரூபாவாகவும், ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் செத்தல் மிளகாய் ஆயிரத்து 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என புறக்கோட்டை வர்த்தகர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய பொருள்களின் விலையும் 40 முதல் 50 ரூபா வரையில் குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

வங்கிகள் டொலரை விடுவித்தமை மற்றும் பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டமை ஆகியவையே இந்த விலைக் குறைப்புக்குக் காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# யாழ்.மாவட்ட ஆலயங்களில் நேற்று வரலட்சுமி விரதம்

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ். மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் நேற்றைய தினம் வரலட்சுமி விரத பூசை வழிபாடுகள் பக்தர்கள் சூழ சிறப்புற இடம் பெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வண்ணையம்பதி ஸ்ரீ வெங்கடவரதராஜப்பெருமாள் ஆலயத்தில் விசேட அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் இடம்பெற்று மஹாலட்சுமி செந்தாமரை பீடத்தில் உள் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

அதன்பின்னர் சிவாச்சாரியார்களால் விரதம் அனுட்டிக்கும் அடியார்களுக்கு மஹாலட்சுமி நூல்காப்புகள் வழங்கப்பட்டன. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"தோல்விகளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன அதனால் தோல்விகளைக் கண்டு அஞ்சாதே!"
- அல்பர்ட் ஐன்ஸ்டைன்

## தலைதூக்கும் துப்பாக்கிச்சூடு

**2006** ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை சிறிலங்கா அரசாங்கத்தால் மூடப்பட்ட பின்னர், திறந்தவெளிச் சிறைச்சாலையாக்கப்பட்டு முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் காலப் பகுதியில் குடாநாட்டில் தினமும் 5 துப்பாக்கிச் சூட்டுக் கொலைகளாவது இடம்பெற்றன.

இதேபோன்றதொரு நிலைமை தற்போது தென்னிலங்கையில் தோன்றியுள்ளது. இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து இதுவரையில் சுமார் 40 பேர் வரையில் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அதிலும் கடந்த மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நேற்றுமுன்தினம் வரையில் 23 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் நேற்றுமுன்தினம் கல்கிஸை நீதிமன்றினுள் புகுந்து வழக்கு விசாரணைகள் இடம்பெறும்போது துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிதாரி தப்பிச் சென்றுள்ளார். சில நாள்களுக்கு முன்னர் கம்பஹாவில் நீதிமன்ற வளாகத்தில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது.

நீதிமன்ற வளாகமே பாதுகாப்பு இல்லாத நிலைமை உருவாகி வருகின்றது. அந்தளவு தூரம் தென்னிலங்கையில் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் வேகமாக வளர்ந்து வருகின்றது. இவையனைத்தும் பாதாள உலக கோஷ்டி மீதோ அல்லது குழு மோதல் மீதோ விரல்காட்டி விட்டு தப்பிக்கும் விடயமல்ல.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் உயர் அதிகாரிகள், தமது கட்டுப்பாட்டிலிருந்த போதைப் பொருள்களை விற்பனை செய்தமை மற்றும் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு உதவியமை போன்ற குற்றச்சாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்னர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அது தொடர்பான வழக்கு இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த வழக்கின் சாட்சிகளே இலக்கு வைத்து ஆரம்பத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். தற்போதும் அதன் தொடர்ச்சியாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்கின்றன.


இது ஆபத்தான நிலைமை. இந்த நாட்டில் போதைப் பொருளை கட்டுப்படுத்த முடியாத சூழலை நோக்கியே இது செல்கின்றது. வேலியே பயிரை மேயும் கதையாக, பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸாரே, போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு உதவியது மாத்திரமல்லாது, அதன் சாட்சிகளை இப்போது வேட்டையாடுகின்றனரா என்ற சந்தேகம் எழுகின்றது. அண்மையில் வெளிவந்த தென்னிந்திய திரைப்படமான 'விக்ரம்' காட்சிகளைத்தான் இந்தச் சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன.

கோத்தாபய ஜனாதிபதியாக இருந்தபோதும் சரி இப்போது ரணில் ஜனாதிபதியாக இருக்கும்போதும் சரி, துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேநபர்கள் கைது செய்யப்படவில்லை. இதனால்தான் அவர்கள் பட்டப்பகலில் பலர் கூடியிருக்கும் வீதிகளில் மோட்டார் சைக்கிளில் வந்து சர்வசாதாரணமாக சுட்டு விட்டு தப்பிச் செல்கின்றனர்.

போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள், சட்டத்தை மீறினார்கள் என்று அவர்களை கலைத்துக் கலைத்து வேட்டையாடும் அரசாங்கமும், அதன் பொலிஸ் படையும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

நடவடிக்கை எடுக்கப்படுவதில் காட்டப்படும் தாமதமும், வழக்கு நடவடிக்கைகளின் சாட்சிகள் துல்லியமாக இலக்கு வைக்கப்படுவதும், இந்தச் சம்பவங்களின் பின்னணியில் பொலிஸாருக்கும் தொடர்பு உண்டு என்ற சந்தேகத்தை பலமாக எழுப்புகின்றது. இந்தச் சந்தேகம் உண்மையாக இருக்குமானால் அதுபோன்றதொரு மிகப் பெரிய ஆபத்து வேறொன்றும் இல்லை.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் துவண்டு போயிருக்கும் இலங்கையில் போதைப்பொருள் பிரச்சினையும் பிரமாண்டமாக தலைதூக்கினால், நாடு சுக்கு நூறாக அழிந்துதான் போகும். போராட்டக்காரர்களை அடக்குவதற்கு தமது முழுப் பலத்தையும் பிரயோகிப்பதை விடுத்து, இந்தத் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரத்தை வேரறுக்க அரசாங்கம் முயலவேண்டும்.



# இலங்கையின் மீட்சிக்கு இந்தியா உதவி செய்யும்

## மீண்டும் ஜெய்சங்கர் உறுதி



**கொழும்பு, ஓக.6**

**இந்தியாவின் நம்பகமான நண்பர் மற்றும் நேர்மையான பங்காளி நாடு என்ற அடிப்படையில் இந்தியா இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

கம்போடியாவில் இடம்பெற்றுவரும் ஆசியான் மற்றும் இந்திய அமைச்சர் மட்ட மாநாட்டில் பங்கேற்க இந்திய வெளியுறவு அமைச்சர் சென்றுள்ள நிலையில் அங்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் அவர் கலந்துரையாடியுள்ளார்.
சீனாவின் ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வரும் நிலையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் முறுகல்களைத் தவிர்க்கும் ராஜதந்திரப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சரின் கருத்து வெளியாகியுள்ளது.

(எ-இ)

# நாட்டில் அரையாண்டில் மட்டுமே 6 லட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகம்!

கொழும்பு, ஓக.6
இலங்கையில் இவ்வாண்டின் முதல் ஏழு மாதங்களில் மாத்திரம் சுமார் 6 லட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப் பட்டுள்ளன எனக் குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளன.
இந்த இடம்பெயர்வு முனைப்புக்களானது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாகவே தீவிரமடைந்துள்ளமையை குறிக்கிறது.
இதுகுறித்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார தெரிவிக்கையில்,
திணைக்கள வரலாற்றின் படி, அதிக எண்ணிக்கையிலான கடவுச்சீட்டுகள் விநியோகம் 2016 ஆம் ஆண்டில் பதிவாகியது. அவ்வாண்டில் 6 லட்சத்து 58 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன.
எனினும் இந்த ஆண்டில் முதல் ஏழு மாதங்களிலேயே சுமார் 6 லட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப் பட்டமையால் அந்தச் சாதனை முறியடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இதேவேளை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் பாதியில் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர் - என்றார்.

(ச-இ)

நாளை 07.08.2022
ஞாயிற்றுக்கிழமை
ஆடி 22
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம்: 04.34 - 06.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் டொலர் கையிருப்பு காலியாகக் காரணம் என்ன?

## உயர்நீதிமன்றில் கேள்வி விசாரணை நடத்தக் கோரிக்கை

கொழும்பு, ஓக.6

இரு ஆண்டுகளுக்குள் நாட்டின் வெளி நாட்டுக் கையிருப்பில் 7 பில்லியன் டொலர் திடீரெனக் குறைந்தமை தொடர் பில் எவரும் தேடிப் பார்க்கவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர தெரிவித்தார்.

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்துக்கும், சீரற்ற நிதி நிர்வாகத்துக்கும் காரணமானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் நேற்றுமுன்தினம் இரண்டாம் நாளாக உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதில் முன்வைத்த வாதங்களிலியே ஜனாதிபதி சட்டத்தரணி இவ் வாறு சுட்டிக்காட்டினார்.

நாடு வங்குரோத்து நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் நிவாட் கப்ரால் உண்மையான நிலைமையை மறைத்து மக்களை ஏமாற்றும் வகையில் நடந்து கொண்டார் என்றும் அவர் தனது வாதங்களில் சுட்டிக்காட்டினார்.

இந்த மனுக்கள் தொடர்பாக அஜித் நிவாட் கப்ரால் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுக்களைப் பார்க்கும்போது, நாட்டில் இத்தனை அழிவுகள் நடந்தும், நாட்டின் நிலைமையை அவர் உணர்ந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இரசாயன உரப் பாவனையை இரத்துச் செய்தமை, சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டங்களை நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்த எத்தனித்தமை எந்த வகையிலும் அடிப்படையற்ற, வெறுமனே அரசியல் கொள்கை சார் தீர்மானம் என்றும் உயர்நீதிமன்றில் சுட்டிக் காட்டப்பட்டது.

பிரதிதிவாதிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளாலேயே நாடு தற்போது வங்குரோத்து நிலையை அடைந்து, அதன் விளைவுகளை மக்கள் அனுபவிக்க நேரிட்டுள்ளது என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி வாதத்தை முன்வைத்தார்.

இரு ஆண்டுகளுக்குள் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு 7 பில்லியன் டொலரால் குறைந்துள்ளது. இது 690 சதவீதக் குறைவாகும். வெளிநாட்டுக் கையிருப்பு திடீரென எவ்வாறு இந்தளவு குறைந்தது என்றும் அவர் உயர்நீதிமன்றில் கேள்வி எழுப்பினார்.

இதன்பின்னர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய வாதங்களை முன்வைத்தார்.

இலங்கையைத் தற்போது உலகம் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு உதாரணமாகக் காண்பிக்கின்றது என்று கூறிய அவர், அதிகாரிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினர் தமது தனிப்பட்ட சவால்களை வெற்றிகொள்வதை விடுத்து பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அரசாங்கம் கொண்டுவந்த வரி நீக்கத் தீர்மானம் அமைச்சரவை எடுத்த மிக மோசமான, முட்டாள்தனமான தீர்மானம் என்றும் அவர் தனது வாதத்தில் குறிப்பிட்டார்.

இந்த மனுக்கள் மீதான மேலதிக பரிசீலனைகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. இந்த மனுக்களில் கோத்தாபய ராஜபக்ச ஜனா திபதியாகப் பதவியேற்றதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட வரி குறைப்பே நாட்டின் தற்போதைய நிலைமைக்குப் பிரதான காரணம் என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. கோத்தாபய ராஜபக்ச , மஹிந்த ராஜபக்ச ஆகியோர் இணைந்து தங்கள் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக வரி குறைக்கும் தீர்மானத்தை தன்னிச்சையாக மேற்கொண்டனர் என்றும், இந்தத் தீர்மானம் முற்றுமுழுதாக அரசியல் ரீதியான நகர்வு என்றும் மனுவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் கொடுக்கல், வாங்கல்களைக் கணக்காய்வுக்கு உட்படுத்தி மத்திய வங்கிக்கு ஏற்பட்டிருக்கும் நட்டத்தை மதிப்பீடு செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மனுக்களில் மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, அஜித் நிவாட் கப்ரால் உட்படப் பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர். (எ-இ)


**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி தாவடி வடக்கில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
(CS 20054) (3/6)

தொடர்பு : 077 255 0807



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




சாவகச்சேரி கிராம்புவில் விவசாயிகளின் காலபோக நெற் செய்கைக்கான ஆரம்பக்கட்டப் பணிகளை மேற்கொள்ள உழவு இயந்திரங்களுக்கு ஒரு கட்ட எரிபொருளினை வழங்கி உதவியமைக்கு சாவகச்சேரி நுணாவில் I.O.C எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்

திருவாளர் **வைத்திலிங்கம் சிவராசா**

அவர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர்: **கிராம்புவில் விவசாயிகள் சாவகச்சேரி.**



**வட இந்திய காசி யாத்திரை**

**04.09.2022** **12 நாட்கள்**

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, பத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்ம புரீஸ்வரர் சிவன், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு

**கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்**

(CS 20164) (3/6) **T.P : 077 768 0102**



**தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பம் கோரல்**

**Royal Flour Mills (Pvt) Ltd**

**கைத்தொழில் பேட்டை அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

**Royal Flour Mills (Pvt) Ltd** நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து உடனடி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **Factory workers**
(தொழிற்சாலை ஊழியர்கள்) - ஆண்கள்
2. **Admin Assisstants**
(நிர்வாக உதவியாளர்கள்)-ஆண்கள்/ பெண்கள் (முன் அனுபவம் / கல்வித்தகைமை)
3. **Marketing / Sales Executives**
(சந்தைப்படுத்தல் / விற்பனை உத்தியோகத்தர்கள் - ஆண்கள் (முன் அனுபவம்/ கல்வித் தகைமை)

Send your CV's to

**chairman@royalflourmills.com**

தொடர்புகளுக்கு :-

**074 190 8551**



**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு**

யாழ்.மண்ணில் 08 வருட கால நம்பிக்கையை வென்ற

**இந்தியன் செலக்ஷனின் ஆடி மாத**

**ஆடித் தள்ளுபடி**

இவ்வருடமும் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், வைபவங்களுக்கான சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்.



காலம் : **29.07.2022** முதல் **08.08.2022** வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

இடம்: **வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்



# ஸ்டாலின் கைதினைக் கண்டித்து முன்னணியினரால் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.6

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது மக்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் போராடும் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜோசப் ஸ்டாலின் உட்பட ஜனநாயகப் போராட்ட செயற்பாட்டாளர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய் போன்ற பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நீதிமன்ற உத்தரவை மீறி போராட்டம் நடத்தியதற்காக கடந்த 3ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-20)

## நல்லூர்க் கந்தன் மஹோற்சவ சிறப்பம்சம்




## குறை களைவான் நல்லையம்பதியான்

நல்லைக் கந்தனின் மஹோற்சவம் ஆரம்பமானதே
காணக் கண்கள் துடிக்குதே
உளம் கொள்ளை போகுதே
அழகுக்கே அழகு சேர்
அழகனின் ஓங்கார வடிவ திருப்பவனி
நல்லூரில் எழுந்தருளி அவனி
எங்கும் அருள்புரி அப்பனைக் கவனி
அலங்காரக் கந்தனின் திருவீதிஉலா
காண ஈர் விழிகள் போதாதே
கனத்த நெஞ்சமே கலங்காதே உன்றன்
குறைகளைவான் நல்லையம்பதியான்



எஸ்.உமாசிவம், ஏழாலையம்பதி



# சிங்கள மொழிக்கு மாறிய முன்பள்ளிகளின் பெயர்கள்

### பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஓக.6

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் உள்ள இரு முன்பள்ளிகள் திடீரெனப் பெயர் மாற்றப்பட்டமைக்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கடந்த 25 ஆண்டுகளாக இயங்கி வந்த மயூரன் முன்பள்ளி மற்றும் பாற்கடல் முன்பள்ளி என்பவற்றின் பெயர்களே திடீரென வீரமுத்துக்கள் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும், சிங்கள மொழி முதன்மைப்படுத்தப்பட்டு சிங்களப் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். கிராம மக்களுக்கோ அல்லது கிராமட்டப் பொது அமைப்புகளுக்கோ அறிவிக்காது முன்பள்ளிகளின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன என்றும், அதனால் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் தற்போது தடைப்பட்டுள்ளன என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பெயர் மாற்றம் தொடர்பில் கிராம அலுவலருக்கோ, பிரதேச செயலருக்கோ, கிராம பொது அமைப்புகளுக்கோ எதுவும் தெரியாத நிலையில், முன்பள்ளிக் கற்றல் நடவடிக்கைகளில் இருந்து தமது பிள்ளைகளைப் பெற்றோர் இடைநிறுத்தியுள்ளனர்.

இந்த முன்பள்ளிகளின் முன்னைய பெயர்களில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-113)

# கடவுச்சீட்டு பறிக்கப்பட்ட பெண்ணுக்கு பிரிட்டன் உதவி

கொழும்பு, ஓக.6

இலங்கையில் குடிவரவு அதிகாரிகளால் கடவுச்சீட்டு கைப்பற்றப்பட்ட ஸ்கொட்லாந்து பெண்ணுக்குப் பிரிட்டன் அரசாங்கம் உதவிக்கரம் நீட்டியுள்ளது.

இலங்கைக்கு பயணம் செய்ய வழங்கப்பட்ட நுழைவிசைவைத் தவறாக பயன்படுத்தினார் என்ற குற்றஞ்சாட்டில் கெய்லி பிரேசரின் கடவுச்சீட்டை இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது.

மருத்துவ காரணங்களுக்காகவே பிரேசருக்கு இலங்கை வருவதற்கு நுழைவிசைவு வழங்கப்பட்டது. ஆனால் அவர் காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஊக்குவிக்க அந்த நுழைவிசைவைப் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதையடுத்து ஸ்கொட்லாந்து நகரான அபெர்டீனைத் தளமாகக் கொண்ட தொழிலாளர் நல மையம், ஸ்கொட்லாந்து அரசாங்கத்துடன் இணைந்து பிரேசரின் பாதுகாப்பை உறுதிசெய்யவும் அவரது மனித உரிமைகள் பாதுகாக்கவும் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் கெய்லியின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் உடனடியாக அவர் இலங்கையில் இருந்து [illegible]

# தொடரும் திருட்டுக்கள்; கைதானார் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், ஓக. 6

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸார் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

குறித்த பகுதியில் அண்மைக்காலமாக மோட்டர் இயந்திரங்கள், சைக்கிள்கள் போன்றவை அடிக்கடி திருட்டுப்போகின்றன எனப் பொலிஸ் நிலையத்தில் பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகிமையையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது இன்பச்சோலை பகுதியைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவரிடமிருந்து 8 மோட்டர்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# பாடசாலைக் கூரை உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருட்டு

கிளிநொச்சி, ஓக. 6

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் அலுவலகத்தின் மேற்கூரை உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன எனப் பாடசாலை அதிபரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி- ஊற்றுப்புலம் பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அலுவலகத்தின் கூரை ஓடு பிரிக்கப்பட்டு அங்கிருந்த 6 மடிக் கணினிகள், மின்விசிறி, புகைப்படக்கருவி, மேசைக்கணினி உள்ளிட்ட பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. முறைப்பாட்டுக்கமைய சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்செய்கைக்கு நுணாவில் ஐ.ஓ.சியில் டீசல்

தென்மராட்சி தெற்குப் பிரதேச காலபோக நெற்செய்கைக்கான ஆயத்த வேலைகளுக்கு நுணாவில் ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்புநிலையத்தில் கடந்த திங்கட்கிழமை எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

சாவகச்சேரி, தனங்களப்பு மற்றும் மறவன்புலவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளின் 70 உழவு இயந்திரங்களுக்கு டீசல் விநியோகிக்கப்பட்டது. அப்பகுதியிலுள்ள கமக்கார அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. (ச-9)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 08 • 04 • 1937

மறைவு 07 • 07 • 2022

31 ஆம் நாட்கள் கடந்ததுவே
உங்கள் பளிங்கு முகம் பார்க்காமல்
உங்கள் பாசக்குரல் கேட்காமல்
உங்கள் நினைவோடு நாம் வாழ்ந்து
31 நாட்கள் ஆனதே அம்மா!

கடந்த (07.07.2022) அன்று சிவபதம் அடைந்த கட்டப்பிராயை பிறப்பிடமாகவும், வேலணை மற்றும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

### திருமதி தவராசா சரஸ்வதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.08.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"நடேச வாசா"
கட்டப்பிராய்

குடும்பத்தினர்

(CS.45837) (2.6)



## கண்ணீர் அஞ்சலி

எமது கோவிலின் அச்சுப்பதிவுவேலைகள், ஏனைய கோவில் திருப்பணி வேலைகளில் ஈடுபாடு கொண்டு எமக்கு உதவிய சமயப் பற்றாளர் எம் அன்புக்குரிய

**672B, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கரிகணன் (தனியார்) நிறுவன அச்சக உரிமையாளர்**

### திரு. சிவஞான சுந்தரம் இராஜ்குமார்



அவர்கள் 02.08.2022
செவ்வாய்க்கிழமை இறைபதம்
அடைந்த செய்தி அறிந்து
பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த துக்கதையும்
எமக்கு எற்படுத்தியது (தந்தது)
அவரின் ஆத்மா சாந்தியடைய
விஸ்வலிங்க மகா கணபதி
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார்)ப்
பெருமானைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

தர்மகர்த்தசபையினர்

**வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதிகோவில், (பன்றிக்கோட்டுப்பிள்ளையார்) யாழ்ப்பாணம்.**

(cs 45835) (2.6)



## மரண அறிவித்தல்



தோற்றம் 15 • 04 • 1952

மறைவு 04 • 08 • 2022

### திரு. பாலசிங்கம் சந்திரபாலன்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சந்திரபாலன் 04.08.2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - தவபாக்கியவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மலீலா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவபாலன், சிவபாலன் (அவுஸ்ரேலியா), இந்திராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இன்னதன், அபிநாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், டினோதினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2022) சனிக்கிழமை காலை 9.00 - மாலை 5.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதி நல்லடக்கம் (07.08.2022) Mahinda Florists - Mount Lavina இல் ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

**இன்னதன் (மகன் - 077 714 8824)**
**அபிநாஷ் (மகன் - 077 052 2988)**

(cs.45818) (2.6)



## மரண அறிவித்தல்



தோற்றம் 09 - 02 - 1951

மறைவு 04 - 08 - 2022

### ரஞ்சினி பத்தகுமார்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கடனாவை வசிப்பிடமாகவும் கொண்ட ரஞ்சினி பத்தகுமார் கடந்த (04.08.2022) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சோதி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்தகுமாரின் அன்பு மனைவியும், ரஞ்சித்குமாரின் (கனடா) அன்புத் தாயாரும், நளாயினியின் (கனடா) அன்பு மாமியாரும், ஆரியனின் அன்பு அப்பம்மாவும், கருணாகரன், சதானந்தசிவம் (கனடா), வசந்தாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுரேஸ்குமார் (கனடா), தெய்வநாயகி, சாந்தினி (கனடா), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (14.08.2022) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருணாகரன் : 077 373 0673
ரஞ்சித்குமார் : + 514 652 8922
சதானந்தசிவம் : + 514 945 2685

தகவல் :
**பொ.கருணாகரன்**
**(சகோதரன் - கருணை)**
**உரும்பிராய் வடக்கு,**

(CS 45839) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிலையங்களில் குண்டர் குழுக்கள் அட்டகாசம்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக.6**

**யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்களை அச்சுறுத்தும் வகையில் சில குழுக்கள் செயற்படுகின்றன என்றும், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.**

யாழ்ப்பாணத்தில் தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் முதல் நாளே வாகனங்களை வரிசையில் நிறுத்தி மறுநாள் எரிபொருள் பெற்றுக்கொள்ளும் நிலைமையே காணப்படுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகே கூடியிருக்கும் குழுக்கள் வரிசைகளில் காத்திருக்கும் மக்களை அச்சுறுத்துவது, கூரிய ஆயுதங்களைக் காட்டி மிரட்டி வரிசைகளின் நடுவே புகுவது, அங்கு கூடி நின்று தகாத வார்த்தைகள் பேசுவது என்று மக்களை அசெளகரியப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சிலநாள்களுக்கு முன்னர் மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையின் நடுவே ஒரு குழு புகுந்தபோது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும், அந்தக் குழு சிறிய கத்திகளை எடுத்துக் காட்டி மக்களை அச்சுறுத்தி எரிபொருள் நிரப்பிச் சென்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையில் இருக்கும் இராணுவத்தினரே நிலைமைகளைக் கட்டுப்படுத்த ஓரளவு முயல்கின்றனர் என்று தெரிவித்துள்ள பொதுமக்கள் ஏனைய தரப்புக்கள் கண்டும் காணாத போக்கிலேயே செயற்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக தேவையற்றுக் கூடும் இவ்வாறான குழுக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

# அரசியல்வாதியின் அலுவலகத்திலிருந்து இரும்புப் பொல்லுகளுடன் ஏறிய குழு!

## மே 9 தாக்குதல் தொடர்பான விசாரணையில் வெளியான தகவல்

கொழும்பு, ஒக.6

'கோத்தா கோ கம', 'மைனா கோ கம' ஆர்ப்பாட்டக்களங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் சந்தேகநபர்களின் கைப்பேசிகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு கோட்டை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மிலான் ஜயதிலக, சனத் நிசாந்த ஆகியோரினதும் பௌத்த செயற்பாட்டாளராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் டொன் பிரியசாத் மற்றும் பாதாள உலக தொடர்புகளைப் பேணும் நாலக விஜேசிங்க ஆகியோரின் கைபேசிகளையே ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள 36 சந்தேகநபர்களில் 35 பேர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக, மேல் நீதிமன்றில் பிறிதொரு வழக்குத் தொடர்பில் முன்னிலையாவதால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

விசாரணையாளர்கள் சார்பில் விசாரணை அதிகாரியான குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணை இலக்கம் 3 இன் பொறுப்பதிகாரி உபுல் கல்வலகே தலைமையிலான குழுவினர் முன்னிலையாகியிருந்தனர். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம முன்னிலையாகியிருந்தார்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவும், சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி கமகே, சானக அபேவிக்ரமவும் முன்னிலையாகினர்.

விசாரணை நிலைவரம் தொடர்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம விளக்கமளித்தார். "கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தபோது, அலரி மாளிகைக்குள் ஆள்களை அழைத்து வந்தமையை மையப்படுத்தியும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 25 பஸ்கள் மற்றும் 23 தனியார் பஸ்களில் அலரி மாளிகைக்கு ஆள்கள் அழைத்து வரப்பட்டமை தெரியவந்துள்ளது. அவற்றில் 13 இ.போ.ச. பஸ்கள் தொடர்பாகவும், 13 தனியார் பஸ்கள் தொடர்பாகவும் சாட்சிப் பதிவுகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதில் முக்கியமான சாட்சியம் ஒன்று வெளிப்பட்டது. சாட்சியாளரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவரது அடையாளத்தை மறைத்து சாட்சியத்தை மன்றில் தெரிவிக்கின்றேன்.

ஒரு இ.போ.ச. டிப்போவில் இருந்து சாட்சியாளருக்கு வழங்கப்பட்ட பணியின் பிரகாரம் அவர் ஒரு அரசியல்வாதியின் அலுவலகத்துக்கு கடந்த மே மாதம் 9 ஆம் திகதி பஸ்ஸைக் கொண்டு சென்றார்.

அந்த அலுவலகத்திலிருந்து மது போதையில் இருந்த குழுவினர் இரும்புப் பொல்லுகளுடன் பஸ்ஸில் ஏறினர் என்று சாட்சியாளர் தெரிவித்தார். அவர்கள் அலரி மாளிகையில் இறங்கியபோது அந்தப் பொல்லுகளைக் கொண்டு சென்றனர் என்றும் அவர் கூறினார். இது மிக முக்கியமான சாட்சியாகும்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி பொலிஸார் கடமைகளைச் சரியாகச் செய்யத் தவறினார்களா? என்ற விசாரணை நிறைவு செய்யப்பட்டு கோவை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது'' என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

விசாரணைகளில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாகக் கேள்வி எழுப்பிய நீதிமன்றம், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (எ-இ)



# மோ.சைக்கிள் - கார் மோதி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக. 6

மோட்டார் சைக்கிள் - கார் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் அச்சுவேலி வல்லைப் பகுதியில் இடம்பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை, கோப்பாயிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த கார் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

மழை பெய்ததால் வல்லைப் பாலத்தில் ஏற்பட்ட வழுக்கு நிலையால் கார் கட்டுப்பாட்டையிழந்து மோட்டார் சைக்கிளை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரின் கால் சேதமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். காரில் பயணித்தவருக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை. எனினும் கார் எதிரே உள்ள பாலத்துக்குள் விழுந்து முற்றாக சேதமடைந்தது. அத்துடன் மோட்டார் சைக்கிளும் பாலத்தில் தூக்கி வீசப்பட்டு முற்றாக சேதமடைந்துள்ளது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,26)

# சிறந்த நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் மு.கா.

## ஹக்கீம் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் சிறந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயார் என்று அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களை உருவாக்குவது தொடர்பான ஜனாதிபதியின் கடிதத்துக்கு சாதகமான பதிலை அனுப்ப எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஜனாதிபதி முன்னெடுக்கும் சிறந்த நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியில் அனைத்துத் தரப்புடன் இணைந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றது - என்றார். (எ-இ)

# சைவ நூலறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக.6

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'சைவ நூல் அறிவுப் போட்டி' நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றி, வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க புத்தகப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 • 11 • 1952

ஆண்டவன் அடியில் 18 • 07 • 2021

## அமரர் செல்வி திருநாவுக்கரசு அமிர்தவதி

அக்காவாய், மைத்துனியாய், அத்தையாய் ஆசையோடு
- அணைத்தவளை
காலனவன் கவர்ந்து கண்ணீரில் எமை நனைத்து
தாயாள் தான்தோன்றி தனயன் கர்ணந்தோட்டத்திறையோள்
பாதமதில் சேர்த்தானோ ? பதை பதைத்தோம் உமை
- நினைத்து

நாளொன்று கிழமையென, நகர்ந்துதான் மாதமென
ஆண்டொன்று ஆனதுவோ? அக்கா நாம் உம்மை பிரிந்து
ஒன்றல்ல நூறாண்டு ஓடோடிப் போனாலும்
என்றும் எம்க்குள்ளிருப்பாய் ஏத்தி மகராசியுமை
பூவேந்தி அரச்சிப்போம் பூவே! நீ அமைதிகொள்வாய்......!
ஓம் சாந்தி ...! சாந்தி ....!!! சாந்தி .....!!!

**தம்பி சுந்தரலிங்கம்**
**குடும்பத்தினர்.**

(cs36291) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 • 03 • 1924

மறைவு 30 • 07 • 2022

## திருமதி ரங்கநாதன் பஞ்சரட்ணம்

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், குளியாப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரங்கநாதன் பஞ்சரட்ணம் கடந்த (30.07.2022) சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற (PWD ஓவசியர் - குளியாப்பிட்டி) சுப்பிரமணியம் ரங்கநாதனின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரன் (ரவி - பிரான்ஸ்), ரவீந்திரா (சிறி), பாலசுப்பிரமணியம் (ஜெயா), ஜீவராஜன் (ஜீவா), காலஞ்சென்ற சாந்தி (லண்டன்) மற்றும் வசந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (கனடா), றஜனி (கனடா), சிறிஸ்கந்தா (றகு - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாரிஒடயல், லிங்கா, ராஜி, கிரிசாந்தி, நிறஞ்சன், றொபேட், ரவீந்திரன், சுந்தரபாலா, தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கமிலி, ஒலிவர், ஹெலன், டயனா, வைகுந்தன், நிர்த்திகா, அனுஷன், வினுஷன், சுகன்யா, ரஜீவன், பிரவின், பிராங்கி, பிரியங்கா, ஜொனி, டானியல், டுலிசி, ஜொய்சி, துளசி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், பகவதி, மகேஸ்வரி, ஆலாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**மகன் (ஜீவா - 077 755 9717)**

(cs.45800) (2.6)

# மரண அறிவித்தல்



**தோற்றம் 28.07.1975**

**மறைவு 02.08.2022**

## சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கண்ணன்)

### (உரிமையாளர், கரிகணன் பிறிண்டேர்ஸ் )

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கண்ணன் - உரிமையாளர், கரிகணன் பிறிண்டேர்ஸ்) அவர்கள் கடந்த (02.08.2022) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் - அனுஷியாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற செல்வராசா - கோசலாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், யாழினியின் அன்புக் கணவரும், மனஸ்வினி (உயர்தரம், சுண்டுக்குளி மகளீர் கல்லூரி), அனுஸ்வினி, (தரம் 9, சுண்டுக்குளி மகளீர் கல்லூரி), சாய்ஸ்வினி (தரம் 1, சுண்டுக்குளி மகளீர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார் (லண்டன்), யசோதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வக்சலா (லண்டன்), மங்களராஜன் (பிரான்ஸ்), சுஜிகுமார் (பிரான்ஸ்), செல்வநிதி (லண்டன்), தாரணி (கொலண்ட்), அமுதபாஷினி (பிரான்ஸ்) ஆகி யோரின் பாசமிகு மைத்துனரும், கிஷோர், டிசானி ஆகியோரின் அன்புச்சித்தப்பாவும், தர்ஷன், தர்ஷிகா, தனுஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**17/9 "கண்ணன் இல்லம்"**
**பிள்ளையார் வீதி,**
**திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 20197) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணெண்ணெய் இல்லை: கட்டுமர மீன்பிடியில் மீனவர்கள்

முல்லைத்தீவு, ஓக.6

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தற்போது பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் கட்டுமரம், குல்லா போன்றவற்றைப் பயன்படுத்தி கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

இயந்திரப் படகுகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் இன்மையால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயினும் சிரமங்களை எதிர்கொண்டேனும் கட்டுமரம், குல்லா போன்றவற்றை பயன்படுத்தி தற்போது கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுகின்றோம்.

போர்க்காலத்தில் தாம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியை விடவும் தற்போது மோசமான நிலைமையை எதிர்கொள்கின்றோம். ஆகவே உரிய அதிகாரிகள் எமக்குக்குரிய மண்ணெண்ணெயைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுத்து வாழ்வாதாரத்துக்கு வழிசமைக்க வேண்டும் -என்றனர். (ச-246)

# வற்றாப்பளை ஆலய வழக்கு; தடையுத்தரவு மேலும் நீடிப்பு

முல்லைத்தீவு, ஓக. 6

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீதிமன்று மேலும் நீடித்துள்ளது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் 30 ஆண்டுகாலமாக மோசடி இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவித்து ஆலய நிர்வாகத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு எதிராக நிர்வாக உறுப்பினர்கள் சிலர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தலைவர், செயலாளர்,பொருளாளர் ஆகியோருக்கு இடைக்காலத் தடை உத்தரவு மன்றினால் பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நிர்வாக உறுப்பினர்களின் தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 28ஆம் திகதிக்கும் நீதிமன்று ஒத்திவைத்துள்ளது. (ச-19)

# கியூஆர் குறியீடு முறையை சீராக்குவதற்கு நடவடிக்கை

## எரிசக்தி அமைச்சர் தலைமையில் புதிய தீர்மானங்கள்

கொழும்பு, ஓக.6

**நாடு முழுவதும் தற்போது கியூஆர் குறியீடு மூலமாக எரிபொருள் வழங்கப்படும் நிலையில், கியூஆர் குறியீட்டு முறைமையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறையில் உள்ள கியூஆர் குறியீடு முறைமையில் உரித்தாளர் தனது விவரங்களை மாற்றியமைக்கக்கூடிய வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்க டொலரில் பணம் செலுத்தி எரிபொருள் அட்டையை விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

பல வாகனங்களைக் கொண்ட அரசாங்க நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் தமது வியாபார பதிவு எண் அல்லது வழங்கப்படும் விசேட அடையாள எண்ணுடன் அவர்களின் அனைத்து வாகனங்களையும் ஒரு குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுடன் இணைத்துப் பதிவு செய்ய முடியும்.

முச்சக்கர வண்டிகள் அந்தப் பிரிவுக்குரிய பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படவேண்டும். முழுநேரமாகத் தொழில்முறை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு மேலதிக எரிபொருள் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்யப்படும். முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சங்கம் தமது அங்கத்தவர்களின் விவரங்களைப் பிரதேச செயலரிடம் சமர்ப்பிக்கும் போது மேலதிக எரிபொருளுக்கான கியூஆர் குறியீடு வழங்கப்படும். மேலதிக எரிபொருள் பாவனை தொடர்பான கண்காணிப்பு மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும்.

தொழில்முறை முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் மேலதிக எரிபொருள் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர், பிரதேச செயலாளர்கள். பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் இணைந்து முடிவெடுப்பார்கள்.

சுற்றுலா பயணிகளுக்கான போக்குவரத்து சேவை, விமான நிலைய போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுவோருக்கான மேலதிக டீசலுக்கான கியூஆர் குறியீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலகவாரியான பதிவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

விவசாய நடவடிக்கைக்குரிய உழவியந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், புல் வெட்டும் இயந்திரங்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்கள், பூங்கா உபகரணங்கள், இயந்திர சாதனங்கள், உள்ளிட்ட தொழில்துறை இயந்திரங்களை பயன்படுத்துவோர் தமது பதிவுகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னராக கமநல சேவைகள் நிலையத்தினூடாக மேற்கொண்டு தமக்கான கியூஆர் குறியீட்டைப் பெற்றுக்கொள்ளும் வசதி அறிமுகமாகவுள்ளது. இதன்மூலம் தேவையான எரிபொருளை அண்மித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மண்ணெண்ணெய் விநியோகத்தை எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள கியூஆர் குறியீடு அளவீட்டுக்கு மேலதிகமான எரிபொருள் தேவைப்படுவோர் தமது தேவை மற்றும் எரிபொருள் அளவை உறுதிப்படுத்தி பிரதேச செயலகங்களில் பதிவு செய்வதன் ஊடாக மேலதிக எரிபொருளுக்கான கியூஆர் குறியீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக பிரதேச செயலகங்களுக்கு கியூஆர் குறியீடு வழங்கப்படும். மேலதிக எரிபொருளை பிரதேச மட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிலையங்களில் வைத்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்களுக்கு மாத்திரம், "ஒதுக்கப்பட்டுள்ள 40 லீற்றர் டீசல்" என்ற வரையறை விலக்கப்படும். அவர்களுக்கான வீதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஓட்டப்படுகின்ற கிலோமீற்றர் எண்ணிக்கைக்கிணங்க தீர்மானிக்கப்படுகின்ற அளவுக்கான டீசல் விநியோகம் இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் அல்லது இராணுவ முகாம்களில் இடம்பெறும்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்காகவும் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பல் நிலையங்களால் பொலிஸ் திணைக்களத்துக்காக ஒதுக்கப்பட்ட அளவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு எதிர்காலத்தில் அந்த நிரப்பல் நிலையங்களுக்கு வழங்கவேண்டிய ஒதுக்கீடு தொடர்பாக விழிப்புணர்வூட்டப்படும். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்படும் கியூஆர் குறியீடு முழுப்பொறுப்பையும் நிலைய உரிமையாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்படும் மொத்த எரிபொருளுக்குமான பதிவுகள் முறையாக பேணப்படவேண்டும். ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விளக்கம் கோரப்படும். உரிய விளக்கங்கள் எரிபொருள் நிலையத்தால் வழங்கப்படாதவிடத்து எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்படும். தொடர்ச்சியாக முறைகேடுகள் இடம்பெறுமாயின் அந்த நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப்படும். கியூஆர் குறியீட்டைப் பிற்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அவ்வாறு விநியோகிக்கப்பட்ட எரிபொருளுக்கான கணக்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரும்போது வழங்கவேண்டியது கட்டாயமாகும்.

பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் எரிபொருள் தொடர்பான கையிருப்புப் பற்றிய தகவல்களை பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டியது அல்லது இணையம் ஊடாக வெளிப்படுத்துவது எரிபொருள் நிரப்பு நிலையங்களின் கடமையாகும். இந்த வேலைத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் வெற்றியீட்டச் செய்வதற்கான நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னெடுக்க வேண்டும் என்று அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சூரிய மின்சக்தி உற்பத்திக் கொடுப்பனவில் தாமதம்!

## வங்கிக் கடனைக் கட்ட முடியாது அந்தரிக்கும் பொதுமக்கள்

கிளிநொச்சி சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டத்தின் கீழ் வங்கிகளில் பல இலட்சம் கடன் பெற்று சூரிய மின்சக்தி உற்பத்தியில் ஈடுபடும் மக்களுக்கான கொடுப்பனவுகள் மின்சார சபையால் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வங்கிக் கடனைப் பெற்றபோது சூரிய மின் சக்தி உற்பத்தி மூலம் கிடைக்கும் வருமானத்துக்கு ஏற்பவே தவணைக் கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டன. இலங்கை மின்சார சபையின் கொடுப்பனவு மூன்று மாதங்களுக்கு மேலாகத் தாமதமாகவும், ஒழுங்காகவும் வழங்கப்படாததால் கடன் தவணைக் கட்டணங்களைச் சீராகச் செலுத்த முடியாதுள்ளது. மூன்று மாதங்களுக்குள் கட்டணங்களைச் செலுத்தாதுவிட்டால் எமது பெயர் "கிறிப்"டில் சேர்க்கப்படும் என்று வங்கிகள் எச்சரிக்கின்றன.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சூரிய மின் சக்தி உற்பத்தி மூலம் பெறப்படும் மின்சாரக் கொடுப்பனவுகளைச் சீராக வழங்க முடியாதுள்ளது என்று தெரிவித்தனர். (எ-214)

# கிளி. மருத்துவமனையில் புதன், சனி தினங்களில் கொரோனாத் தடுப்பூசி

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது என மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை தடுப்பூசியைப் பெறலாம். நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகளவில் பதிவாகும் நிலையில் மக்களை தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக. 6

இலங்கை வங்கி யாழ்.மாவட்ட ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை வங்கியின் 83ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 1.30 மணி வரை இடம்பெறவுள்ளது. (ச)

# சிறுதொழில் முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் 'யாழ்.முயற்சியாளர்-2022' விற்பனைக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10,11,12 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம், நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் இந்த விற்பனைக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும்முகமாகவும் இந்தக் கண்காட்சி இடம்பெறுகிறது.

கண்காட்சியை பார்வையிடுவோர் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் என யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

### *தன்னிச்சையான...*

திடல் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போதே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது எந்தத் தவறும் செய்யாது தளத்தில் இருக்கின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் கைதுசெய்யப்படுவதால் அங்கிருந்து வெளியே செல்லப் பயப்படுகின்றனர். இந்தப் போராட்டத்தின் மிகவும் கடினமான பகுதி தற்போது ஆரம்பமாகியுள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் சிந்தனைகளிலும் புரட்சி ஏற்பட வேண்டும். இளம் தலைமுறையினர் எல்லையற்ற அர்ப்பணிப்புடன் நாட்டுக்குப் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அரசமைப்பு ரீதியில் சாதகமான பயனைப் பெறுவதே எமது எதிர்பார்ப்பு.

கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தங்கள் உட்பட நாட்டை முறையான மற்றும் உறுதியான நிலைக்குக் கொண்டுவர விரைவான சீர்திருத்தச் செயல்முறையை நிறுவ வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்.

போராட்டத்தின் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல பெரிய வெற்றிகளை இளைஞர்கள் பெற்றுத் தந்தது எங்களின் தலைமுறையின் தனிச்சிறப்பு. உலகம் முழுவதும் ஜனநாயகத்தைப் போற்றும் மக்களால் இந்தப் போராட்டம் மதிக்கப்படுகின்றது. அதன் காரணமாகவே நமது நாடு உலகின் கவனத்தைப் பெற்றது' - என்றனர். (அ-ம-22)

### *அரச அலுவலர்கள்...*

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் சிறப்பு ஏற்பாட்டின் அடிப்படையில் இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. 17 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த நிரப்பு நிலையங்களில் இன்று குறித்தொதுக் கப்பட்ட அடிப்படையில் அரச அலுவலர்களும் ஓய்வூதியர்களும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-17)

### *பொருளாதாரப்...*

பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினருக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜனநாயக விரோத அரசியலையும் வன்முறையையும் நான் எதிர்க்கின்றேன். ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்படுபவர்கள், பல்கலைக்கழக செயற்பாட்டின் ஊடாக பகிடிவதையை நிறுத்தி சிறந்த சமூக ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பவும் முன்வர வேண்டும். இன்று எமது பல்கலைக்கழகக் கட்டமைப்பு சீர்குலைந்து இருப்பதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று பகிடிவதை ஆகும்.

வேலைநிறுத்தங்கள் எல்லாக் காலத்திலும் தொடர்ந்தன. வேலைநிறுத்தங்கள் மூலம் ஒரு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. பேச்சு மூலம் மத்தியஸ்த நிலைக்கு வந்து கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வதைப் போன்று, நாட்டுக்காகச் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

அனைத்து ஆர்ப்பாட்டக்காரர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதான குழுவொன்றை உருவாக்க வேண்டும். அந்தக் குழுவில் அனைத்து மதங்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமானது.

இளைஞர்களின் தேவைகளுக்காக அரச அனுசரணையுடன் செயற்படுத்துவதற்கு, கொழும்பு கோட்டை மிதக்கும் சந்தை மற்றும் பல்வேறு திட்டங்களை முன்மொழிய நான் விரும்புகின்றேன். அது தொடர்பில் முறையான ஆலோசனைகளைப் பெரும்பான்மையான ஆர்ப்பாட்டக்காரர்களின் பங்களிப்புடன் தயாரித்துக் கையளியுங்கள்.

அந்தச் செயற்பாட்டில், கல்விக்கான நூலகங்கள், அரசியல் கல்விக்கான வசதிகள், இசை, கலை, நாடகம் போன்ற இளைஞர்களின் திறன்கள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மத்திய நிலையமாக அது உருவாக்கப்பட வேண்டும்.

அவசரகால நிலையை முடிந்தவரை விரைவில் நீக்குவது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உறுதித்தன்மைக்கு முக்கியமாக இருப்பதைப் போன்று, தற்போதுள்ள நிலைமைகள் காரணமாக நாட்டின்நிர்வாகத்திலும் அதன் தாக்கம் இருக்கின்றது.

பொதுமக்கள் சபைகளை அமைப்பது தொடர்பில் ஏற்கனவே பல தரப்பினரிடமிருந்து முன்மொழிவுகள் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளேன்' - என்றார். (அ-ம-22)

### *நீச்சல்...*

இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். அக்கரைப்பற்றைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரைக் காணவில்லை என்று நேற்றுமுன்தினம் பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், நேற்று அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

உ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சுபகிருது வருடம் ஆடி மாதம் 13ஆம் நாள் (29.07.2022) வெள்ளிக்கிழமை வளர்பிறை பிரதமை திதியும், ஆயிலிய நட்சத்திரமும் கூடிய வேளையில் சிவபதமெய்திய மீனாட்சி அம்மாவின் அன்புக் கணவரும், எமது அன்புத் தந்தையாருமாகிய

**சிவஸ்ரீ.வைத்தியநாத ஐயர் சுப்பிரமணியக் குருக்கள்**

அவர்களின் தசாக கிருஹயக்ஞ கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேற்படி கிரியைகளில் தாங்களும் கலந்துகொண்டு 10.08.2022 புதன்கிழமை அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| தசாகம் | 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை |
| ஏகோதிஷ்டம், மாசியம் | 08.08.2022 திங்கட்கிழமை |
| சபிண்டீகரணம் | 09.08.2022 செவ்வாய்க்கிழமை |
| கிருஹயக்ஞம்(சமாராதனை) | 10.08.2022 புதன்கிழமை |

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,

021 222 6143
077 743 9475 (ராஜன் ஐயா)
077 256 0125 (கௌரி)

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

## மரண அறிவித்தல்

மலர்வு
12.09.1941



உதிர்வு
02.08.2022

### திருமதி கந்தையா நாகேஸ்வரி அம்மா

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகேஸ்வரி அம்மா கடந்த (02.08.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும், அருந்ததி (ஜேர்மனி), அன்பழகி (சுவிஸ்), அகிலா (சுவிஸ்), அமுதா(பிரான்ஸ்), அகிலன் (அமெரிக்கா), அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காசிப்பிள்ளை (ஜேர்மனி), சுபாஷ்கரன் (சுவிஸ்), ரமணிதரன் (சுவிஸ்), இரமேஷ் (பிரான்ஸ்), குகேதினி (அமெரிக்கா), சசிகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சக்தீபன், அபிரா, சதீபன், ஐஸ்வர்யா, அர்ஷசுதா, சஞ்ஜீவன், ரஞ்ஜன், தனோஜன், தகானா, ஐஷ்வந்தி, லவதீசன், விஷ்ணுசெல்லத், அபிராமி, அஷ்வினி, சித்தாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வீரத், ஜானு, ரியோ, அஹானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் (சுவிஸ்), தட்ஷணகைலாயபதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், செல்லத்துரை, சண்முகரத்தினம், வீரசிங்கம் மற்றும் சிவபாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் யோகராணி (சுவிஸ்), இராஜினிதேவி, ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் [illegible]

அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊரியான் இந்து மயானத்தில் தகனம் [illegible]. [illegible] உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 11 - 1955



மறைவு
05 . 08 . 2022

### திருமதி துரைராசா மகேந்திரராணி

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மயிலிட்டி பாமாலயத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா மகேந்திரராணி 05.08.2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற டாக்டர் தம்பு துரைராசா (D.A.M) அவர்களின் அன்பு மனைவியும் திரு.சி.மகேந்திரன் (பாலேந்திரன் - ஓய்வுநிலை தபால் ஊழியர், கரவெட்டி) அவர்களின் அன்புச் சகோதரியும் த.இராசதுரை, காலஞ்சென்ற இ.தவமணிதேவி, திருமதி க.கமலாதேவி, த.தவேந்திரராஜா (ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரவெட்டி), த.செல்வநேசன், திருமதி ம.மங்களவதனி ஆகியோரின் மைத்துனியும் டாக்டர் து.இராஜவேல் (மாதுஜன் மெடிக்கல் வல்வெட்டித்துறை), ஞானவேல் (கல்விசாரா ஊழியர், யா/சின்னத்தம்பி வித்தியாலயம்), அ.பாமதி, வேலும் மயிலும் (சுவிஸ்), நிரோஜன் (சுவிஸ்), ஜீவிதன (கமநலத் திணைக்களம், வேலணை), மாதுஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ரா.சாயிதர்சினி (ஆசிரியர், யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), திரு.க.அனுசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்தூரிக்கா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மாதுரி ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2022) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணிக்கு அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாமாலயம்,
மயிலிட்டி, அல்வாய்.

077 666 4674
076 919 5630

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆறு மாதங்கள் கடினமான காலகட்டம்

## ஜனாதிபதி ரணில் மீண்டும் ஆருடம்

இலங்கையின் பொருளாதாரத்தில் அடுத்த 6 மாதங்கள் நிச்சயம் கடினமான காலகட்டமாகவே இருக்கப் போகின்றது. ஆதலால், நிலையான கடனொன்றைப் பெறுவது தற்போது தவிர்க்க முடியாத காலத்தேவையாக உள்ளது இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

'இலங்கையை மீண்டும் கட்டமைப்போம்' என்ற தொனிப்பொருளில் அட்வகாட்டா நிறுவனத்தினால் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைகள் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலில் நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இரண்டாவது மிக முக்கியமானது நிலையான கடன் ஒன்றைப் பெறுவது. இந்தக் கடனைப் பெறுவது தொடர்பில் எவருக்கேனும் ஆலோசனைகள் இருந்தால் அது இலகுவாக இருக்கும். உண்மையாக நாம் அந்த முன்மொழிவுகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், இந்த முன்மொழிவுகள் குறித்து நாடாளுமன்றம் முடிவெடுக்க முடியும்.

அரசாங்கங்கள் மற்றும் அரச பொதுக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களில் நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு அடிப்படை பிரச்சினையாகும். அடுத்த ஆறு மாதங்களிலும் கண்டிப்பாக சிரமங்களை சந்திக்க நேரிடும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியமும் ஒப்புக்கொள்கிறது. நாடு முதலில் வெளிநாட்டுக் கடன் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். மேலும், ஆசிய பிராந்தியத்தின் புவிசார் அரசியலில் சிக்கிக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும்.

**புத்தாக்க சிந்தனைகள் புகுத்தப்படல் வேண்டும்**

நாம் அதிகளவிலான கடன்தொகையை மீள செலுத்த வேண்டியுள்ளது. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை, அணுசக்தி பயன்பாடு ஆகிய துறைகள் தொடர்பில் சம்பிரதாய கட்டமைப்புக்கு வெளியே சிந்திக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் நாட்டின் எதிர்காலத்தை சீரமைக்க முடியாது.

தற்போது இலங்கை செய்ய வேண்டிய முதல் பணி இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதாகும். 1997ஆம் ஆண்டு ஆசிய நிதி நெருக்கடி மற்றும் 1997ஆம் ஆண்டு தாய்லாந்து பொருளாதார நெருக்கடியின் போது, அவற்றிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் அவர்களுக்கு வழிகாட்டியது.

கொரோனா மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலைக் கல்வி தடைபட்டுள்ளது. அதை விரைவில் இயல்பு நிலைக்கு மீட்டெடுக்க வேண்டும். அத்துடன், விவசாயம் மற்றும் மீன்பிடித் துறையை நவீனமயமாக்குதல், உற்பத்தியில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தணித்தல், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மக்களின் வீட்டுத் தேவைகள், கிராமப்புறங்களில் உள்ள வறுமை போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதிக ஊதியம் பெறும், அதிக உற்பத்தித்திறன் கொண்ட போட்டிப் பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். பெரிய அளவில் அதிகரித்து வரும் சந்தைகளைக் கொண்ட ஆசிய நாடுகளுடன் வர்த்தக உறவுகளை உருவாக்க வேண்டும். தற்போதைய உலகப் பொருளாதாரச் சூழல் எந்த நாட்டுக்கும் சாதகமாக இல்லை - என்றார். (அ-ம)

(தொடர்புடைய செய்தி பக்.02)

## எதிர்க்கட்சியாக...

சர்வகட்சி அரசை அமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

'சர்வகட்சி அரசில் இணையுமாறு அனைத்துக் கட்சிகளையும் நாங்கள் அழைத்துள்ளோம். அதற்காக அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். நாட்டின் பொருளாதாரம் தற்போது இக்கட்டான நிலையில் உள்ளது. இந்தநிலையில் இருந்து மீள அனைவரும் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்று சர்வகட்சி அரசை உருவாக்கி இந்த நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஐக்கிய மக்கள் சக்தியை சர்வகட்சி அரசில் எங்களுடன் இணைந்து பணியாற்ற வருமாறு அழைக்கின்றேன். இவர்கள் அனைவரும் என்னுடன் பணியாற்றியவர்கள். எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் ஒன்றாக வேலை செய்ய முடியும்.

1941ஆம் ஆண்டு, பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியானது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்துக்கொண்டு அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டது. முழு நாடாளுமன்றமும் அரசாக ஆக்கப்பட்டது. அதே மரபை நாமும் செயற்படுத்தலாம்.

1977ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தில் 5/6 அதிகாரம் பெற்று அரசு அமைக்கப்பட்டு நாடு கட்டியெழுப்பப்பட்டது. ஆனால், இப்போது 5/6 அதிகாரத்தாலும் சர்வகட்சி அரசு இல்லாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ஒரே வழி சர்வகட்சி ஆட்சி மாத்திரமே ஆகும்.

சமீபத்திய வன்முறைச் செயல்கள் காரணமாக, நாங்கள் அவசரகால உத்தரவை விதிக்க வேண்டியிருந்தது. ஆனால், அவசரகால உத்தரவைத் தொடர்வதற்கு நான் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், எதிர்கால பொருளாதார வேலைத்திட்டத்தின்போது சில சட்டங்கள் விதிக்கப்பட வேண்டும். அதற்கு அவசரகாலச் சட்டம் தேவை' - என்றார். (அ-ம-22)

## 'கோத்தா கோ கம'...

களால் அகற்றப்பட்டன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கோத்தா கோ கம போராட்டக்காரர்கள், நேற்று மாலை 5 மணிக்குள் குறித்த பகுதியில் இருந்து வெளியேறி, ரணில் அரசாங்கத்தால் போராட்டத்துக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட பகுதிக்குச் செல்ல வேண்டும் என்று பொலிஸார் வலியுறுத்தியிருந்தனர்.

பொலிஸாரின் இந்தக் கோரிக்கையை செவிமெடுக்கத் தயாரில்லை என்று போராட்டக்காரர்கள் முன்னதாக அறிவித்திருந்த போதிலும், காலிமுகத்திடலில் உள்ள, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் சிலைக்கு அண்மித்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த 'கோத்தா கோ கம'வின் தற்காலிக கூடாரங்கள் நேற்று நண்பகல் போராட்டக்காரர்களால் அகற்றப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (அ-ம)

## அவசரகாலச்...

ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு நாங்கள் பரிந்துரைக்க விரும்புகின்றோம். அன்று நாட்டின் பிரதமராக நீங்கள் 19ஆவது திருத்தத்தைக் கொண்டு வர தலைமைத்துவம் வழங்கினீர்கள். அது மிகவும் நல்ல ஒரு நகர்வு ஆகும். எனவே, இதனை மேலும் முன்னெடுத்துச் செல்லுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் 19ஆவது திருத்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அரசமைப்பு சபைகளின் எண்ணிக்கை 20ஆவது திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்தபடியே அதனைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

இன்று நாட்டில் நிலவும் மிகப்பெரிய பிரச்சினை, மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமை சுமத்தப்பட்டுள்ளமை ஆகும். இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், தற்போதுள்ள அவசரகால சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். நாடாளுமன்றத்தில் துறைசார் குழுக்களை அமைத்தால் மட்டும் போதாது. இது தவிர மேலும் பல குழுக்களை அமைப்பதில் கவனம் செலுத்த பரிந்துரைக்கின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தி நேர்மறை எண்ணங்களுடன் இன்று இந்தக் கலந்துரையாடலுக்கு வந்துள்ளது. இந்த நேரத்தில், ஒரு நாடாக, நாம் இந்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள வேண்டும். நாட்டின் தற்போது அசாதாரணமான அரசியல் சூழ்நிலை உள்ளதென்றே கூற வேண்டும். அதனை முழுமையாகப் புரிந்துகொண்டு இந்தக் கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்ல நான் தயாராக உள்ளேன் - என்றார்.

**ஊழலற்ற நாடே மக்களின் கனவு**

இதேவேளை குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில்,

'ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து மக்களினதும் கோரிக்கையாக உள்ளது. அதில் நாம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்புவது எம் அனைவரினதும் பொறுப்பு ஆகும். சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவது பயனுள்ளதாக இல்லை. தற்போதுள்ள பிரச்சினைக்கு அதை தீர்வாக நான் பார்க்கவில்லை. தற்போது நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காண வேண்டியதே அவசியமாகும்' - என்றார். (அ-ம-22)

## காலிமுகத்திடல்...

வரை அகற்றப்படாது என்று சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

அதேநேரம், குறித்த காலப்பகுதிக்குள் இந்த அனுமதியற்ற கூடாரங்களை அகற்றுவது தொடர்பான ஆரம்பகட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எந்தத் தடையும் இல்லை என்றும், தாமாக முன்வந்து பிரதேசத்தை விட்டு வெளியேற விரும்புபவர்கள் வெளியேறுவதற்கு எவ்விதத் தடையும் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ-ம)

## வங்கிப்...

ஆயிரத்து 750 அமெரிக்க டொலரில் இருந்து 6 ஆயிரத்து 550 அமெரிக்க டொலராக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார முன்வைத்த திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி, 20 ஆயிரம் அமெரிக்க டொலர் முதல் அதிகபட்சம் 65 ஆயிரம் டொலர்வரை அவர்கள் அனுப்பியிருந்தால் மின்சாரக் காரை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் நாணயக்கார தெரிவித்ததாவது:-

புலம்பெயர் தொழிலாளர்கள் வங்கிகள் மூலம் தமது வருமானத்தை தாயகத்துக்கு அனுப்பும் பழக்கம் ஜூலை மாதம் அதிகரித்துள்ளது. இந்தப் பணத்தால் எண்ணெய், எரிவாயு, மருந்து என்பவற்றை வாங்க முடிந்தது. எனவேதான் நாட்டில் நிலவும் பிரச்சினையை தீர்க்க உங்களால் இயன்ற ஆதரவை வழங்குமாறு கோரிக்கை விடுகின்றோம்.

சிலர் உண்டியல், ஹவாலா போன்ற முறைகள் மூலம் பணம் அனுப்பினாலும், நாட்டை நேசிக்கும் மக்கள் தங்கள் டொலர், யென் மற்றும் தினார் என்பவற்றை வங்கிகள் மூலமாகவே அனுப்பி வைத்தனர். அந்த டொலர் கையிருப்பைக் கொண்டு இந்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியும் - என்றார். (அ-ம)

## ஐஸ் போதை...

அவர் கள்ளப்பாடு தெற்கினைச் சேர்ந்தவர். மற்றையவர் 21 வயதுடையவர். அவர் உண்ணாப்பிலவைச் சேர்ந்தவர். சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## இன்றும்...

ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், நேற்றுமுதல் தினசரி மின்வெட்டின் காலஅளவு ஒரு மணிநேரமாகக் குறைக்கப்பட்டது. இந்த நிலையில், இன்றும் நாளையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி பொலிஸ் நிலைய

## பொறுப்பதிகாரி இடமாற்றம்; பொதுமக்கள் வரவேற்பு!

யாழ்ப்பாணம், ஓக. 6
அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டமைக்குப் பொதுமக்கள் பலரும் வரவேற்புத் தெரிவித்துள்ளதுடன், வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நன்றியும் தெரிவித்துள்ளனர்.
அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களால் சுமத்தப்பட்டிருந்தன. இதையடுத்து அவர் கடந்த மாதம் 21ஆம் திகதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த உத்தரவுக்கு பொதுமக்கள் வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.
அதேநேரம், குறித்த பொலிஸ் அதிகாரி மீண்டும் அதே பொலிஸ் நிலையத்தில் கடமையில் இணைந்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றாரா? என்ற சந்தேகம் தமக்கு உள்ளதாகவும். ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட இடமாற்றல் உத்தரவை சரியான முறையில் நடைமுறைப்படுத்தித் தரவேண்டும் என்றும் பொதுமக்கள் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் பொதுமக்கள் கோரியுள்ளனர்.
(அ-ம)

சித்தன்கேணி நிரப்பு நிலையத்தில்

## 1,500 அரச ஊழியர்களுக்கு இன்று எரிபொருள்

யாழ்ப்பாணம், ஓக. 6
சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று ஆயிரத்து 500 அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் பெற்றோல் வழங்கப்படவுள்ளது. அந்தவகையில் ஆண்கள் 750 பேருக்கும் பெண்கள் 750 பேருக்கும் இவ்வாறு பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.
அரச உத்தியோகத்தர்கள் 200 பேருக்கும், ஆசிரியர்கள் 100 பேருக்கும், பொதுமக்கள் 800 பேருக்கும் தனித்தனி வரிசையில் நேற்றும் பெற்றோல் வழங்கப்பட்டது. பாடசாலைகள் இயங்குகின்ற நிலையில் ஆசிரியர்கள் எரிபொருளுக்கு எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு நேற்று இந்த நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
இதேவேளை கியூ.ஆர் நடைமுறை பின்பற்றலின்போது குறித்த இலக்கினை அடைந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த நிலையமும் உள்வாங்கப்பட்டதனால் மேலதிக எரிபொருள் இந்த நிரப்பு நிலையத்துக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை கர்ப்பிணித் தாய்மாருக்கு எரிபொருள் விநியோகிப்பது தொடர்பிலும் மேற்படி சங்கம் கவனம் செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(அம-17-27)


### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
வயது: 30 - 45, இடம்: கொக்குவில்.
077 364 0579

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகர்ப்பகுதியில் அல்லது யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.தகுந்த முற்பணம்.வாடகை வழங்கப்படும்.
077 32 92 259

### கார் விற்பனைக்கு

TOYOTA VITZ கார் NP CBL - 18 ஆம் ஆண்டு 15.000 கி.மீ ஓடியது விற்பனைக்கு.
ஜீவன் - 077 844 8020

### Win Repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டி, வாசிங் மிஷின், A/C என்பன பழுதடைந்து விட்டனவா? உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் செய்து கொடுக்கின்றோம்.
தொடர்புகளுக்கு : 077 964 8942

### வேலையாட்கள் தேவை

நன்கு அனுபவமுள்ள பெயின்ரிங் மற்றும் தச்சு வேலையாட்கள் தேவை.
**சம்பளம் - 2000.00**
(தொடர்புகொள்ளவேண்டிய நேரம் – 8.30 – 5.30)
தொடர்புகளுக்கு 076 058 6677

### தேவை

தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனைளார் பழக விரும்புவோர் தேவை.
**வயது - 18 - 21 வரை**
**சம்பளம் : 20 000 - 30 000 வரை**
(CR 36837) (3/6)
வெல்ரான் போன் சொப் யாழ்ப்பாணம் 077 199 6117

### கார் விற்பனைக்கு

ALTO 800, Metalic Grey,
2015 1st Owner
Price- 2.9 Million
Contact- 075 630 9978

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மாபிள் பதித்த சகல வசதியும் கொண்ட வடக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு.
077 082 1010, 077 441 0919

### காணி விற்பனைக்கு

**யாழ் நாவற்குழியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள். களஞ்சியசாலைகள், மண்டபங்கள். வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

**பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

### பதவி வெற்றிடம்

பிரபல கட்டட நிறுவனத்திற்கு பின்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. பொருத்தமான விண்ணப்பதாரிகள் கீழ் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையை (BIO DATA) **08.08.2022** ற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் கட்டடத்துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
**பதவி : நிர்வாக உத்தியோகஸ்தர் (Admim Assistant)**
E-mail : adminjaffna@sanken.lk
Tel.No : 021 222 4840 (CS 45840) (3/6)

### பராமரிப்பாளர் தேவை



**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு வாகனங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரங்கள்**
போன்றவற்றை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
**(இயந்திரங்கள் பழுதுபார்க்க தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.)**
**ஞாயிற்றுக்கிழமை**
**காலை: 9.00 - 01.00 வரை நேரில் வரவும்**
**392/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**(கைலாச பிள்ளையார் கோவிலடி)**


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 - 03 - 1946 |  | 04 - 08 - 2022 |

### திரு. கோவிந்தபிள்ளை கோபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற பொறுப்புத்தாதிய உத்தியோகத்தர் – போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.கோவிந்தபிள்ளை கோபாலசிங்கம் அவர்கள் கடந்த (04.08.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்ற ஐயாத்துரை இராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மரஞ்சினி (ஓய்வுபெற்ற தாதிய சகோதரி. போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம்). அவர்களின் அன்பு கணவரும். நிருத்திகன். கார்த்திகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்றவர்களான செல்லம்மா. கனகம்மா மற்றும் சிவசோதி. குலசிங்கம். குமாரசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும். சுவர்ணா. சாம்பவி. ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்றவர்களான திருஞானசுந்தரம். துரைராஜா. பத்மநாதன் மற்றும் பிரேமினி. புஷ்பராணி. கமலரஞ்சினி. காலஞ்சென்ற சிறிரஞ்சினி மற்றும் சத்தியரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும். காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ஆனந்த குமாரசாமி காலஞ்சென்ற ஜெயராஜா ஆகியோரின் சகலனும். அனித்திரன். அனுவர்த்தன். தரண்யன். அனந்திதன். வான்மீகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/1 A.காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(CS 45817 ) (3/6)

தகவல் : குடும்பத்தினர்
077 322 2824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.